# திருவாறன்விளை (ஆறம்முளா) ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)





ஆசிரியர்:

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்



நன்றி:

1.ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நாராயணன் ஸ்வாமி - தமிழ் மற்றும் ஸம்ஸ்க்ருத தட்டச்சு உதவி

2. www.anudinam.org - படங்கள் உதவி

3. சௌ. ஸ்வேதா ஸுந்தரம் - மின்புத்தகத் தொகுப்பு





CONTENTS


| | |
|---|---|
| ஆசிரியர் முன்னுரை | 1 |
| திருவாறன்விளை (ஆறம்முளா) திவ்ய தேசம் | 3 - 10 |








திருவாறன்விளை (ஆறம்முளா) ( Courtesy: Anudinam.org )



ஸ்ரீ:

# திருவாறன்விளை (ஆறம்முளா) - ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

******

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த பொழுது 1992 மார்ச் தொடங்கி 1993 செப்டம்பர் வரை பல வெளிநாடுகளுக்கு பயணித்திருந்த வேளைகளில் பகவத் சிந்தனை விடாமலிருக்க, 108 திவ்ய தேசங்களைப் பற்றி வேத, வேதாங்கங்கள், ஆழ்வார் அருளிச்செயல்கள், ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் கொண்டாடப் பட்டிருக்கும் விதங்களை பற்றி எழுந்த கருத்துக் கோவைகளை ஒரு நூல் வடிவமாக எழதியது இன்றும் பசுமையாக மனதில் நினைவிருக்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக, மலையாள நாட்டு திவ்ய தேசமான திருவாறன்விளை (ஆறம்முளா) பற்றி ஆழ்வார்களின் மங்களாசாஸனங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரி சடகோபன்





Sarangapani Paramapadanathan alankaram ( Courtesy anudinam.org )



ஸ்ரீ:

# திருவாறன்விளை (ஆறம்முளா)- ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )

****

மலைநாட்டு திருப்பதிகள்: திருவாறன்விளை (ஆறம்முளா)

திருசெங்குன்றூரிலிருந்து, கிழக்கே 6 மைல் தூரத்தில் உள்ள திருவாறன்விளை என்ற திவ்ய தேசத்தில், திருக்குறளப்பன் என்ற வாமன மூர்த்தி, பத்மாஸநி நாச்சியாருடன் வாமன விமான நிழலில் நின்ற திருக்கோலத்தில் ஸேவை தருகிறான். இந்த தலத்தின் புஷ்கரிணிக்குப் பெயர் வேதவ்யாஸ ஸரஸ். பகவான், நான்கு வேதங்களை, நான்கு முகங்களால் ஓதும் ப்ரஹ்மாவிற்கு ப்ரத்யக்ஷம். சிறிய குன்றின் மேல் திருக்குறளப்பன் கோயில் கொண்டுள்ளான். அருகில் மலையாள தேச ஸம்பிரதாயத்தை அனுஸரித்து, சிவனார் கோயில் ஒன்றும் உள்ளது. திருவாறன்விளை கோயிலின் இடது பக்கத்தில், சபரி வஸித்து நீராட்டம் கண்ட பம்பா நதி ப்ரவஹிக்கிறது.

பரமபதம் அடைய வேணும் என்று தன்னை நெருக்கிய நம்மாழ்வார், இன்னும் சில திருவாய்மொழிகள் அருள வேண்டுமென ஸ்ரீவைகுண்டபதி நினைத்தார் போலும். அதனால் ஸ்ரீ வைகுண்டத்தில் உனக்கு கிடைக்கக் கூடிய ஸேவையை திருவாறன்விளையிலேயே இப்போதைக்கு ஸேவிக்கலாமே என்று சொல்லி, பரமபத ஸேவை அருளினார். நம்மாழ்வாரும் அந்த ஸேவை கண்டு ஆனந்தமடைந்து, பகவானுக்கு கைங்கர்யம் திருவாறன்விளையில் எனக்கு கிட்டுமா என பத்து பாசுரங்களில் கேட்டார். இந்த திருப்பதி ஸம்பந்தமான முதல் பாசுரம் பின் வருமாறு:

இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் தானும் இவ் வேழுலகை,

இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற எங்கள் பிரான்,

அன்புற்றமர்ந்துறை கின்ற அணிபொழில் சூழ் திருவாறன்விளை,

அன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொழு நாள்களுமாகுங்கொலோ.

“ வைகுண்டேது பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணு:” என்ற விதமாக **ஸ்ரீ வைகுண்டநாதன்,** தன் தேவியுடன் நின்று நித்ய ஸூரிகளுக்கு ஸேவை தருவது போல் நம்மாழ்வாருக்கு ஸேவை



தந்தான் என உத்தமூர் ஸ்வாமிகள் நமக்கு சொல்லியுள்ளார். ஏழு லோகங்களில் உள்ள ஜீவராசிகளையும் மகிழ்விக்க, ஸ்ரீ வைகுண்டத்தில், மஹாலக்ஷ்மியுடன் இனிதே நின்று ஸேவை தரும் பரம புருஷன், திருவாறன்விளையில் நின்று, தன் திருவாய்மொழியை ஆசையுடன் கேட்டான் என்று ஆழ்வார் சொன்னார். அப்பேர்பட்ட சோலை சூழ் க்ஷேத்ரத்தையும், க்ஷேத்ரநாதனையும், ப்ரதக்ஷிணம் செய்து, ஸேவிக்கும் நாட்கள் தனக்கு கிடைக்குமோ என்று ஏக்கத்துடன், இப்பாசுர மூலம் நம்மாழ்வார் கேட்டார்.

போன பாசுரத்தில், "இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் தானும்" என்ற இடத்தில் மலர் மாதான பத்மாஸநி நாச்சியாரைத் திருகுறளப்பனுக்கு முன்னதாக நம்மாழ்வார் மங்களாஸாசனம் செய்தார். அடுத்த பாசுரத்தில் க்ஷேத்ர நாதனான திருகுறளப்பனை மங்களாஸாசனம் செய்தார். சிறு வாமன ப்ரஹ்மசாரியாக அவதரித்து, மஹா பலியின் யஞ்ஞ சாலையில், ஓங்கி உலகளந்த உத்தமனாகிய **த்ரிவிக்ரமனாக** ஆழ்வார் திருகுறளப்பனை பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்:

ஆகுங்கொல் ஐயமொன்றின்றியகலிடம் முற்றவும், ஈரடியே

ஆகும் பரிசு **நிமிர்ந்த திருக்குறளப்பன் அமர்ந்துறையும்**,

மாகம் திகழ் கொடி மாடங்கள் நீடு மதிள் **திருவாறன்விளை**,

மாகந்த நீர் கொண்டு தூவி வலஞ்செய்து கைதொழக் கூடுங்கொலோ.



திருக்கோவலூர் த்ரிவிக்ரம பெருமாள் ( Courtesy anudinam.org )

வாமன மூர்த்தி மூன்றடி மண் வேண்டும் என்று மஹா பலியிடம் கேட்டார். அதை பார்த்துக் கொண்டிருந்த தேவர்கள், இந்த சிறு பையனால் பூமியையும், வானுலகையும் மூன்றடியால் அளக்க முடியுமோ என்று சந்தேஹப்

பட்டார்கள். அவர்கள் கவலை விலக, இரண்டு அடிகளாலேயே மண்ணையும், விண்ணையும் த்ரிவிக்ரமன் அளந்து, மூன்றாவது அடியை எங்கே வைக்க என்று பலி சக்ரவர்த்தியினிடம் கேட்டார். இப்படி "ஐய்யம் ஒன்று இன்றி" அளந்து மஹா பலியின் தானத்திற்கு பூர்ணத்வம் ஏற்படுத்திய திருவாறன்விளை வாமனனை ஆழ்வார் மங்களாஸாசனம் செய்தார். செல்வம் மல்கும் திருவாறன்விளையின் திருவீதிகளை, பரிமளமுள்ள சிறந்த நீரால் தெளித்து, பகவானின் வீதி வலத்திற்கு ஏற்பாடுகள் செய்து, அதன் பின் அவன் பின் சென்று இக்கோயிலை ப்ரதக்ஷிணம் செய்ய வேணும். அந்த சௌபாக்யம் எப்போது கிடைக்கும் என ஆழ்வார் ஏங்கினார்.



திருவாறன்விளை (ஆறம்முளா) ( Courtesy: Anudinam.org )

வேதவ்யாஸ ஸரஸ் தீரத்தில், வேதங்கள் ஓதும் தன் மகனான சதுர்முக ப்ரஹ்ம்மாவிற்கு ப்ரத்யக்ஷமாய் வேதாத்யயனம் செய்த வாமன மூர்த்தி (திருக்குறளப்பன்), வேத மூர்த்தியாய் திருவாறன்விளையில் நின்று வருகிறான். இத்தனை வேத சம்பந்தங்கள் கொண்ட ஊரில், வேத வித்துக்களான வேதியர்கள் நிறைந்திருப்பதில் ஆச்சர்யம் இல்லை. வேத வல்லுணர்கள் வாழ்வதால் அதிக உயர்வு கொண்டு சதுர்வேத மங்கலமாய் உள்ள இத்திருப்பதியின் வேத சம்பந்தத்தை நம்மாழ்வார், திருவாறன்விளை பற்றிய இரண்டு பாசுரங்களில் பின் வருமாறு போற்றியுள்ளார்:

கூடுங்கொல் வைகலும் கோவிந்தனை மதுசூதனைக் கோளரியை,

ஆடும் பறவை மிசைக் கண்டு கை தொழுதன்றி அவனுறையும்,

பாடும் பெரும்புகழ் நான் மறை வேள்வியைந்து ஆறங்கம் பன்னினர் வாழ்,

நீடு பொழில் திருவாறன்விளை தொழு வாய்க்குங்கொல் நிச்சலுமே.

இத்திருப்பதியில், மதுகைடபர்களை வதம் செய்து, பிரமனுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்த

**ஹயக்ரீவனை** மதுசூதனனாக ஆழ்வார் ஸேவித்துக் கொள்கிறார். திருக்குறளப்பனாக இங்கு விளங்கும் பெருமானே மதுசூதனனாகவும், ப்ரஹ்லாதனுக்கு அனுக்ரஹம் செய்த நரஸிம்ஹனாகவும், அவதரித்தார். அந்த திருக்குறளப்பனை "மாகந்த நீர் தூவி" சுத்தப்படுத்திய திருவீதிகள் மேல் கருட வாஹனத்தில் கண்டு தொழ வேண்டும். அந்த பாக்யம் எப்போது எனக்கு கிடைக்கப் போகிறது என்று தன் மனதிடம் கேட்டார். திருக்குறளப்பனை ஸேவிப்பது மாத்திரம் அல்லாது, மஹத் ச்ரேயஸ்ஸுகள் கொண்ட நான்கு வேதங்கள் ஓதும் பெரியோர்கள், பஞ்ச மஹா யஞ்ஞங்களை செய்து வரும் மஹான்கள், வேதத்தின் ஆறு அங்கங்களில் புலமை கொண்ட மஹா வித்வான்கள் நிறைந்த இந்த க்ஷேத்ரத்தையும் சேர்த்தே ஸேவித்துக் கொள்ள வேண்டும் என்று ஆழ்வார் சொன்னார்.



லக்ஷ்மி ஹயக்ரீவர் ( Courtesy anudinam.org )

நான்காவது பாசுரத்தில் க்ருஷ்ணாவதாரம் எடுத்த திருவாறன்விளை எம் பெருமானின் அடி மலர்களை, ஒரு வினாடி கூட மறக்காது நினைத்திருக்கும் பாக்யம் எனக்கு கிட்டுமா என கேட்டார்.

" வாய்க்கும் பெரும் புகழ் மூவுலகீசன் வட மதுரை பிறந்த, வாய்க்கும் மணிநிறக் கண்ணபிரான் தன்

**மலரடிப் போதுகளே**, நிச்சலும் எப்பொழுதும் மனத்து ஈங்கு நினைக்கப் பெற வாய்ங்குங் கொல்" என்பது பாசுர வாக்யங்கள்.

" ஈங்கு மனத்து நினைக்கப் பெற" என்னும் போது, திருவாறன்விளைக்கு செல்ல முடியாது போனாலும், இங்கு திருக்குருகூர் புளிய மரத்தடியிலிருந்தே, என் மனதால் நினைக்கப் பெறும் பாக்யம் கிட்டுமா என நம்மாழ்வார் கேட்டார். "மலரடிப் போதுகள்" என்ற மலர்ந்த புஷ்பங்களைப் போல் உள்ள கண்ணபிரானின் திருவடிகளை எல்லாக் காலத்திலும் (நிச்சலும்) நினைத்திருப்பதால் "நம் மேல் வினை ஒன்றும் நில்லா கெடும்" என்று ஆழ்வார் சொன்னார். நம்மை அழுத்தி நிற்கும் கொடிய வினைகளில் ஒன்று கூட திருவாறன்விளை எம் பெருமானை நிச்சலும் நினைப்பதால் நம்மிடம் நிற்காமல் ஒழியும் என்றார்.



மன்னார்குடி ராஜகோபாலன் ( Courtesy anudinam.org )

ஏழாவது பாசுரத்தில், திருவாறன்விளை பெருமாள் க்ருஷ்ணாவதார சமயம் பாணாசுரனின் ஆயிரம் தோள்களில், நான்கை மாத்திரம் விட்டு வைத்து, மற்றவைகள் எல்லாம் வெட்டி வீழ்த்தினதை குறிப்பிட்டார். ப்ரஹ்லாதாழ்வானுக்கு கொடுத்த வரத்தால், அவர் பரம்பரையில் வந்த பாணாசுரனையும் வதம் செய்யாது க்ருஷ்ணன் நிறுத்தினார். அப்பேற்பட்ட பராக்ரமசாலியினிடம் சரணாகதி செய்து பிழைப்பதை தவிர வேறு ஒன்றும் ச்லாகிக்க தகுந்த கார்யமல்ல என்று ஆழ்வார் சொன்னார். "மலர் சோலைகள் சூழ் திருவாறன்விளை அதுவே நீள் நகரம்" என்று இப்பாசுரத்தில் குறிப்பிட்டார். அதாவது, புஷ்பங்கள் நிறைந்த பசும் சோலைகளை உடைய திருவாறன்விளையே, நாம் தேடி அடைய வேண்டுமிடம் என்று ஆழ்வார் அறிவித்தார்.

தாமரைப் பொய்கையில், பகவானின் ஆராதனத்திற்காக மலர் கொய்ய **வந்த கஜேந்த்ரன்** முரட்டு



முதலையால் பீடிக்கப்பட்டு, தண்ணீருக்குள் இழுத்துச் செல்லப் பட்டான். காலைக் கவ்வின முதலையின் பிடியிலிருந்து விடுபட முடியாது, ஆதிமூலமே, என்னை ரக்ஷி என்று கஜேந்த்ரன் உரக்க கூவினான். ஸ்ரீவைகுண்டத்தில். தன் பக்தனின் கதறல் கேட்டு, பகவான் ஓடோடியும் வந்து, முதலையைக் கொன்று, கஜேந்த்ரனை ரக்ஷித்தான். அப்பேற்பட்ட கஜேந்த்ர வரதன், ஆச்ரித ஜனங்களை ரக்ஷிக்க திருவாறன்விளையில் கோயில் கொண்டுள்ளான். அத்திருப்பதியை அடைந்து, அக்கோயிலை பிரதக்ஷிணம் செய்தால், நம் பூர்வ ஜன்ம க்ருத பாபங்கள் உடனே அழியும். ஆகவே திருவாறன்விளை அடையுங்கள். பகவானை வலம் செய்து ப்ரபத்தி செய்து உய்யும் மார்க்கம் தேடுங்கள் என்று எட்டாவது பாசுரத்தில் பின் வருமாறு ஆழ்வார் சொன்னார்:



திருவல்லிக்கேணி மாஸி தெப்போத்ஸவம் ( Courtesy anudinam.org )

அன்றி மற்றொன்றிம் நின் சரணே

என்று அகலிரும் பொய்கையின் வாய்,

நின்று தன் நீள் கழலேத்திய

ஆனையின் நெஞ்சிடர் தீர்த்த பிரான்,

சென்றங்கினிதுறைகின்ற

செழும்பொழில் சூழ் திருவாறன்விளை

ஒன்றி வலஞ்செய்ய ஒன்றுமோ?

தீவினை யுள்ளத்தின் சார்வல்லவே.





பத்தாவது பாசுரத்தில், திருவாறன்விளையில் நித்ய வாஸம் செய்யும் பரம பாவன மூர்த்தியிடம் என் மனதை இழந்த பின், என் சிந்தை பரமபதம் போன்ற மற்ற விஷயங்களில் ஈடுபடாது உள்ளது. இந்த விஷயத்தை திருவாறன்விளை எம் பெருமான் அறிந்து கொண்டுள்ளான். அவனால் அறியக் கூடாத என் மன சிந்தனைகள் ஏதும் இல்லை. மனத்தாலும், சொல்லாலும், உடலாலும் நித்ய கைங்கர்யம் புரியும் பூதேவர் என்ற அந்தணர்கள் நிறைந்த திருவாறன்விளை திருப்பதியில் எனக்கு உள்ள அஸாதரணமான ஈடுபாட்டை பரிசுத்தனான (தீர்த்தனான) பகவான் அறிவார் எனப் பின் வருமாறு ஆழ்வார் கூறினார்:

***சிந்தை*** மற்றொன்றின் திறத்தல்லாத் தன்மை தேவபிரானறியும்,

***சிந்தையி***னால் செய்வ தானறியாதன மாயங்களொன்றுமில்லை

***சிந்தையி***னால் சொல்லினால் செய்கையால் நிலத்தேவர்குழு வணங்கும்

***சிந்தை*** மகிழ் திருவாறன் விளையுறை தீர்த்தனுக்கற்ற பின்னே.

திருவாறன்விளையில் பவித்ரனான பரமாத்மாவுக்கு தான் சேஷபூதன் என்று தெளிவாக அறிந்தபின், அவனைத் தவிர மோக்ஷமடையும் உபாயம் ஒன்றும் இல்லை என்று தேறி, அந்த புனித மூர்த்தியிடம் அகலாத சித்தமுடையவனாகி செய்த பரிசுத்தமான பாசுரங்களை அப்யஸித்தவர்கள் தாங்களும் புனிதத் தன்மை அடைவார்கள் என்று ஆழ்வார் பின் வருமாறு கூறினார்:

***தீர்த்தனுக்கற்றபின் மற்றோர்***

***சரணில்லை*** யென்றெண்ணி, தீர்த்தனுக்கே

***தீர்த்த*** மனத்தனாகிச்

செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன,

***தீர்த்தங்***காளியிரத்துள்ளிவை

பத்தும் வல்லார்களை, தேவர் வைகல்,

***தீர்த்தங்***களே யென்று பூசித்து

நல்கி யுரைப்பர் தம் தேவியர்கே.

எல்லா விதமான அநிஷ்ட்டங்களும் (துர்பாக்யங்களும்) நிவ்ருத்தியாகி இப்பாசுரங்களை அப்யஸிப்பவர் பரம புனிதர் ஆகி, தேவர்களாலும் கொண்டாடப் பெறுவார்கள் என ஆழ்வார் கூறினார். நாமும், திருவாறன்விளைப் பெருமானை தொழுது, நம் மனோரதங்கள் நிறைவேறப்பெறுவோமாக!





श्री ஆறன்விளை क्षेत्रे पम्पा वेद व्यास पुष्करणी तटे वामन विमानश्चायायां स्थिताय पूर्वाभिमुखाय श्रिमते पद्मासनी नायिका समेत श्री वामन (திருக்குறளப்பன்) परब्रह्मणे नमः

ஶ்ரீ ஆறன்விளை க்ஷேத்ரே பம்பா வேத வ்யாஸ புஷ்கரணீ தடே வாமன விமானச்சாயாயாம் ஸ்திதாய பூர்வாபிமுகாய ஶ்ரீமதே பத்மாஸநி நாயிகா ஸமேத ஶ்ரீ வாமன (திருக்குறளப்பன்) பரப்ரஹ்மணே நம:

SrI AaRanviLai kshetre pampA veda vyAsa pushkaraNI taTe vAmana vimAnaScAyAyAm sthitAya pUrvAbhimukhAya, Srimate padmAsanI nAyikaa sameta SrI vAmana ( tirukkuraLappan ) parabrahmaNe namaH

||சுபம்||

## Additional Reading Material:

1. Sthala Puranam from Anudinam.org

